Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

12 NOV 1971
DE GRADUATE LIBRARY

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

துலாம் மேஷ்டி எண் 49 | கலை 13
போன் 389 | தேசிய இலச்சினை | இதழ் 273

சாற்வொனம் ஐப்பசி 26 தமிழான் 23 வெள்ளிக்கிழமை (12-11-71)

வூல்ஸிலி
பம்புகளின்
உதிரிப்பாகங்கள்
கம்பனி விலைக்கே
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்டீல்சன்ஸ்
20/5, ஸ்ரான்லிவீதி. யாழ்ப்பாணம்.
போன் 7035

அரிசிப் பங்கீட்டு புதியதிட்டம் 15-ந் திகதி அமுலுக்கு வரும்!

சீனி, மாவு விலைகள் நேற்றே அதிகரிப்பு

கொழும்பு, வியாழன்

கூப்பனுக்கு வழங்கப்படும் 2வது கொத்து அரிசிக்கு ஒரு ரூபாவீதம் அறவிடும் திட்டம் இம்மாதம் 15ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

சீனி, மாவு யோனறவைக்கான புதிய யோசனைகள் இன்று (11ம் திகதி) தொடக்கமே அமுலுக்கு வருகின்றன.

டாக்டர் என். எம். பெரேரா தமது வரவுசெலவுத் திட்டத்தில் தெரிவித்துள்ள யோசனைகளுக்கமைய உணவுப் பங்கீட்டு ஆணையாளர் விடுத்த ஓர் அறிக்கையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

மாதம் ஒருவருக்கு 2 ரூத்தல் சீனி வழங்கும் திட்டம் 11-ம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது. எனினும் இந்த மாதத்துக்குரிய 2 ரூத்தல் சீனியையும் எவரும் பெற்றுக் கொள்ளலாம். ரூத்தல் 72 சத விதம் வழங்கப்படும் இந்தச் சீனியைப் பாவனையாளர்கள் தாம் விரும்பியபடி தனியே முறையிலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் வருப்பு, மாசி போன்றவற்றைப் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படும் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். மேலதிகமாக சீனி வாங்க விரும்புவோர் ரூபா 1-50 சதம் வழங்க வேண்டும்.

மாவின் விலை 15சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது இன்று 11ம் திகதி முதற் கொண்டே அமுலுக்கு வருகின்றது. பாணின் விலை 14 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூப்பனுக்கு வழங்கப்படும் அரிசியின் முதல் கொத்து இலவசமாகவும் இரண்டாவது கொத்து ஒரு ரூபாய்க்கும் வழங்கப்படும்.

தபால்கட்டண உயர்வு

வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட புதிய தபால் கட்டண உயர்வு இன்றுமுதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தபால் கட்டண உயர்வு சம்பந்தமான தகவல் கிடைப்பதற்கு முன்னரே பழைய கட்டணத்துடன் தபால்களை அனுப்பியவர்களின் தபால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான மேலதிக பணம் அறவிடப்படமாட்டாது.

உறையிடப்படாத கடிதத்திற்கு 15 சதமாகவும், தபால் அட்டை 10 சதமாகவும், உயர்த்தப்பட்டது தெரிந்ததே.

உறையிடப்படாத தபால்களுக்கு கட இருக்கும் ஒவ்வொரு 2 அவுன்சுகளுக்கு மேலதிகமாக 5 சதம் அறவிடப்படும். செய்திப் பத்திரிகைகள் அனுப்புவதில் எவ்வித கட்டண மாற்றமும் இல்லை.

இந்திய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

இந்திரா கட்சிக்கே காளைச் சின்னம்

புதுடில்லி, நவ. 11 பொதுச்செயலாளர் திரு. இந்திய தேசிய காங்கிரசு சாதிக்குலி சுப்ரீம்கோர்ட் ரஸ் கட்சியின் நுகத்தடி டில் மனுத்தாக்கல் செய் பூட்டிய இரண்டு காளை திருத்தார் சுமைக் கொண்ட சின்னம் இந்த பதுவை விசாரித்த திடுமதி இந்திரா காங்கிரசு சுப்ரீம்கோர்ட், காளைமாடு ரஸ்கட்சிக்கே உரியது என டுச் சின்னம் சஞ்சீவையா தலைமைக்காங்கிரசு வாரத சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

கடந்த தேர்தலின்போது காளைச்சின்னம் திரு. சஞ்சீவையா தலைமையில் இயங்கும் (ஸ்தாபன) காங்கிரசு கட்சிக்கே உரியதென தேர்தல் கமிஷன் செய்தமுடிவை ஆட்சேபித்து ஸ்தாபன காங்கிரசு கட்சியின் சிக்கே உரியதென தேர்தல் கமிஷன் செய்த முடிவு சரியானதுதான் எனவும் உண்மையான தேசியக் காங்கிரசு கட்சி எதுவென முடிவெடுத்தது தேர்தல் கமிஷனின் அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயம்தான் எனவும் தீர்ப்பு வழங்கியது.

'ஏற்கனவே கடமையாற்றிய அரசாங்க ஊழியரை

மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு செல்லவிடக்கூடாது!'

கோண்டாவில், வியா.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரசாங்க ஊழியர்களைத் திரும்பவும் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றலாகிச் செல்ல அனுமதிக்கக்கூடாது.

சகல அமைச்சர்களின் நிரந்தரச் செயலாளர்கள், இவர்களுக்கு கீழுள்ள அதிகாரிகளுக்கு பொது நிர்வாக உத்தரவிட்டு, உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர், டயஸ் பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய வர்களுக்கு மீண்டும் அதே இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தால் அதனை கடனடியாக நிறுத்தமாறும் மேற்படி உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்தேசியவாத அரசாங்க ஊழியர்கள் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் கோரி புள்ளனர் ஆனால் அந்த இடங்களில் எண்ணிக்கை ஒறவாகக் காணப்படுவதாலேயே இந்த நடவடிக்கையை அமைச்சர் எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த இடமாற்ற விடயமாக பல தொழிற்சங்கங்கள் கடந்த நடவடிக்கை தவிர்வாகவே நிறைவேற்றப்பட வேண்டியதென்றும் அமைச்சர் பீலிக்ஸ் கூறியுள்ளார்.

சீனியின் நன்றி

கொழும்பு, வியா.

ஐ. நா. சபையில் சம்யூனிஸ்ட் சீனா இடம்பெறுவதற்கு முயற்சி எடுத்ததைக் காரணமாக சீன அரசாங்கம் இலங்கை அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளது.

கல்லை நடவை தங்கோப் பேட்டி கண்டுள்ளதாகவும் தான் எடுத்துள்ள நடவடிக்கை தற்காலிகமாக நிறைவேற்றப்பட வேண்டியதென்றும் அமைச்சர் பீலிக்ஸ் கூறியுள்ளார்.

'சுந்தர் கூட்டும் ஆலோசனை

மாநாடு

மாவிட்டபுரம், வியா.

மாவைக்கந்தன் ஆலயபிரபுக்களின் தீர்ப்பையடுத்து எழுந்துள்ள பிரச்சினை பற்றி ஆராயுமுகமாக இம்மாதம் 12-ம் திகதி ஓர் ஆலோசனைக் கூட்டத்தை ஆலய நிர்வாகியான திரு. வி. சுந்தரலிங்கம் கூட்டுகிறார்.

ஆலயத்தின் வளர்ச்சி, புனிதம், மரபு, பழமை ஆதியவை கோட்பாடுகளை முன்வைத்து கூட்டத்தில் முடிவு செய்யப்படும் தீர்மானங்களை அமுல் நடாத்த ஆதீனகர்த்தா முடிவு செய்துள்ளதாக இக்கூட்டத்தோர்கம் சம்பந்தமாக ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ த. ஷண்முகநாதக்குருக்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒய்வு பெறுவார்

ஊரதீவு, வியா

திரு செ. சோமசுந்தரம் அரசாங்க சேவையில் இருந்து எதிர்வரும் மார்ழி மாதத்துடன் ஒய்வு பெற இருக்கிறார்.

உயர் நீதிமன்ற வழக்குரைஞராக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட இவர், ஒய்வு பெறுதலின் யாழ் நகரில் 'ஆட்லக்கே'டாக தொழில் நடத்தவிருக்கிறார்.

வடக்கில் புயல் அபாயம்?

காங்கேசன்துறைக்கு பலன அழுக்கம்

கொழும்பு, வியா.

காங்கேசன்துறைக்கு சுமார் 400 மைலுக்கப்பாலே புயலகின்னம் நேன்றி விருப்பதாகத் தெரிகின்றது.

காங்கேசன்துறைக்கு வடகிழக்கில் வங்காளக் கடலின் தென்மேற்குதியில் இந்த காற்றழுத்தம் நேன்றி விடுப்பதாக கொழும்பு வளநிலையம் அறிவித்தது.

இதனால் வடக்கு கிழக்கு கரையோரப் பகுதிகளில் இன்று பலத்த காற்றும் மழையும் கடல்கொந்தளிப்பும் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இன்று காலை 6 மணிமுதல் 24 மணிநேரத்துக்கு வடக்குகிழக்குக் கரையோரங்களில் வானநிலை சீராகவிருக்காதென்று அவதானநிலையம் அறிவித்தது.

அப்பால்

வரி விளம்பரம்

பலவித நவதானியங்களும், கோழி, நீனி வகைகளும் மருந்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு பற்றிரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுன் ரோட், யாழ்ப்பாணம். 3694

மணிமார்க் சுத்தமான வரகு அரிசி, நிரிழிவு நிவாரணத்திற்கு டாக்டர்களினால் சிபார்சுசெய்யப்பட்டு எனது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்றது. P.முத்தையா, வசந்தா இன்டஸ்ரீஸ், நாவலடிலேன், யாழ்ப்பாணம். 3706

உழுத்தம்பருப்பு விலைபாரத்தில் அதிக இலாபமடைய குறைந்த கூலியில் உழுந்து உடைத்து கொடுக்கப்படும் நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்புகொள்ளவும் முகமதி கிரைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3675

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) எஞ்சினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3709

தேவை

யாழ்ப்பாண நகரில் - வீடு - வாடகை - லயம் - தோட்டம் அறுதியாகத்தேவை. வாடகை உடனே கிடைக்கும். விலை விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3716, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 3716

விற்பனைக்கு

பதிமினி ஜவ்வாதுபத்திகள், சோப்புகளிலும், இன்னமிகளிலும், விழாக்களிலும் உபயோகிக்கக்கூடிய சிறந்த மலிவான பத்திகள். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 3, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு 3708

விற்பனைக்கு

கிரிகெட்டிக் கேணிக்கு 1/4 மைலுக்குள் காங்கேசன்துறை ரோட்டில் கடற்கரைப் பக்கமாக ஒரு சிறிய 27 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு வாங்குவோரின் வசதிக்கேற்ப காணி பிரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: கே. நாகநாதன் ஆத்தியடி, படுத்தித்துறை. 3731

திருத்தம்

காங்கேசன்துறை பட்டினசபை

கேள்விவிளம்பரம்

11-11-71ந் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் கேள்வி வைப்புப்பணம் (1) மின்சார உபகரணங்களும், ஆயுதங்களும் என்றதற்கு ரூபா 25/- என்றிருப்பதை ரூபா 50/- எனவும், (2) பொதுப் பண்டசாலை உபகரணங்களும், களஞ்சார உபகரணங்களும் என்றதற்கு ரூபா 50/- என்றிருப்பதை ரூபா 25/- எனவும் திருத்தி வாசிக்கவும். 3133

இடமாற்றம்

ஊரதீவு, விநாயகர் எழுவைதீவு ஸ்ரீ முருகவேள் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. வி. சுப்பிரமணியம் வரைநகருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி எழுவைதீவு மக்கள் பாராட்டு விழாவொன்றையும் நடத்தினர்.

ராஜா (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். -வி. என். ஜானகி
தினசரி 4 காட்சிகள் நடித்த
இன்று மட்டும்
மோகினி

ராணி (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் — விஜயலலிதா
தினசரி 2-30, 6-30 நடித்த
நூற்றுக்கு நூறு
தினசரி 10-30, 10-00
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
என்தம்பி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன் (இரு வேடங்களில் நடித்த.
காவியத்தலைவி

4-வது வெற்றிவாரம்
லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
ஆராதனை
(சக்திமகிமை பத்திரம்)
ராஜேஷ்கன்னா ✱ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ மரீகா ஜலால்
நடித்தது:

2-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்.

✱ ரவிச்சந்திரன்
✱ ஜெயலலிதா
✱ நாகேஷ்
✱ அசோகன்
✱ ஷீலா
நடித்த
மூன்றெழுத்து
(சக்திமகிமை வார்)

சாந்தி சினிமா (சங்கானை)
கொள்ளி, சனி: காலை 4.15
DUFFY
காலை, 6-30, இரவு 9-30
ஞாயிறு: பி.ப. 2-30 மற்றும்
சிவாஜி—பத்மினி நடித்த
இருமாலர் பெருமை

MANOHARA
Jaffna
Daily 4-45 700- & 9-45
Sat, Sundays 10-30.
Tony Tenser's
LOVE IN OUR TIME
(Eastman Color)
(adults only)

வெல்லிசினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி— சாவித்திரி
பாசமலர்

நாகம்ஸ்சினிமா
கல்லூரி
தினசரி 4-30
சனி ஞாயிறு 10-30
FALSE SHAME
தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
வாழ்க்கைப்படகு

REGAL Jaffna
Daily 5-15 7-15 p.m.
Sat-Sundays 10-30 a m,
Bill Travers
Virginia McKenna
in
AN ELE HANT CALLED SLOWLY

தினசரி பி. ப 2-00, 10-00
சிவாஜி-தேவிகா; நாகேஷ் நடித்த
அன்புக்கரங்கள்
(புதிய கொப்பி)

போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் வெள்ளி யுத்தளம் இந்துமகாசபையின் ஆறுமுகநாவலர் கிண்ண விழா பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

கீழ்ப்பிரிவு:

செல்வி சி. உமாதேவி (செண்மேரிஸ் தமிழ் வித்தியாலயம்), செல்வி ந. சுபத்திரா செண்மேரீஸ் தமிழ் வித்தியாலயம்), செல்வி ஸ்ரீ நகுலமதனி (செண்மேரீஸ் தமிழ் வித்தியாலயம்);

மத்தியபிரிவு:

செல்வன் பா. ஆனந்த கிருஷ்ணன் (செண்மேரீஸ் தமிழ் வித்தியாலயம்), செல்வி சே. யசோதா (செண்மேரீஸ் தமிழ் வித்தியாலயம்), செல்வன் க. யோகநாதன் (செண்மேரீஸ் தமிழ்வித்தியாலயம்).

மேற்பிரிவு:

செல்வி க. சண்டேஸ்வரி (பாத்திமா மகளிர் மகாவித்தியாலயம்), செல்வி க. பழனாராணி (செண்மேரீஸ் தமிழ்வித்தியாலயம்) செல்வி க. கணேஸ்வரி (பாத்திமா மகளிர் மகாவித்தியாலயம்)

மேற்படி போட்டியின் நடுவர்களாக திரு எஸ். சேகரப்பிள்ளை, திரு உதயன், திரு எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் கடமையாற்றினார்கள். போட்டிக்கான ஏற்பாடுகளைச் சபையின் பொதுச் செயலாளர் திரு ஆ. தியாகராசா செய்திருந்தார்.

உதைபந்தாட்டம்

யாழ். கோஷ்டிகள் வெற்றி

யாழ்ப்பாணம். வெள்ளி யாழ். தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், கிளிநொச்சி ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், யாழ். தெரிவுக் கோஷ்டி 5—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

யாழ். தலைநகர் தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ். இந்துக் கல்லூரி தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், யாழ். தலைநகர் கோஷ்டி 3—2 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். இந்த இரு போட்டிகளும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன. (தே. நி)

உதைபந்தாட்டம்

உடுப்பிட்டி, விநாயகர் அணியால் கரவெட்டி இளைஞர் அபிவிருத்தி இயக்கத்திற்கும், நெல்லியடி லக்சர குறிஸ் கிளப்பிற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இளைஞர் அபிவிருத்தி இயக்கம் 3—2 கோல்களால் வெற்றியீட்டியது.

இப் போட்டிக்குத் திரு. ஜ. சி. சர்வேஸ்வரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. வொல் கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற கழகத்திற்கு வெற்றிக் கேடயத்தை வழங்கினார்.

புத்தூரில் இரு விபத்துகள்

பருத்தித்துறை, விநாயகர் இவ்வாரம் புத்தூர்ச் சந்தியில் அடுத்த இரு நாட்களில் இரு விபத்துகள் நடந்தன. முதல்நாள் மீன் விற்பனை ஒருவரை ஒரு கார்

எதிர்கால இளைஞர் கைகளில்

உடுப்பிட்டி, விநாயகர் வாலிபர்களின் கைகளில் தான் நாட்டின் எதிர்கால முன்னேற்றம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் விவசாயம் கைத்தொழிற்துறைகளில் ஈடுபட்டு உழைப்பதின் மூலம் தமது வாழ்க்கைவளம்பெற்றுச் செல்வதோடு நாடுகட்கும் பணி புரிந்தவர்களாகி ஊர்கள். இவ்வாறு கரணவாய் கரவெட்டி இளைஞர் அபிவிருத்தி இயக்கத்தினராக உச்சிக் குமரன் கோயில் முன்றலில் உருவாக்கப்பட்டுவரும் பொதுக்கலையரங்கினை நாட்டி வைத்துப் பேசுகையில் இளைப்பாறிய ஆசிரியர் திரு ஐ. சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

இராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு செகவாமி நாதன் தலைமையில் இவ்வடிக்கை நாட்டுவிழா நடைபெற்றது.

பன்முறைப் பயிர்ச் செய்கை

சங்கானை, விநாழன் வலிகாமம் மேற்குப்பகுதியில் சங்கானை விவசாய விரிவாக்க நிலையத்தார், பன்முறைப் பயிர்ச் செய்கை பரீட்சார்த்தமாக ஆரம்பித்துள்ளனர்.

நெல்லுமேடைபோடாது, விட்டுவிருந்தையில் மண் தொடர்பில்லாமல் டபோக் எனப்படும் முறையில் காற்றூக்கி நடுவதும், நெல்நடப்படும் துண்டங்களிடையே வரம்பை உயர்த்தி அதில் வெண்காயம் கோவா ஆகியன நட்டும் பின் ஒவ்வொரு பயிரும் அறுவடையானதும் அந்த இடத்தில் மிளகாய் போன்ற பயிரை நடுவதுமாக இந்த புதிய பயிர்ச்செய்கை அமையும். இதனால் இப்பகுதி விவசாயிகள் ஓரே முறையில் பல விதபயிர்களை முறைக்கு முறை நாட்டி பயன்பெறுவதற்கு ஏதுவாகும்.

உபதபால் நிலையம்

ஊரதீவு, விநாயகர் தீவுப்பகுதி ஸ்ரீலக்ஷ்மி கதிரர்க்கலை அமைப்பாளர் திரு பகதிரவேலுவின் வேண்டுகோளின்படி புங்குடுதீவு கண்ணகைபுரம் கோயிலுக்கண்மையில் புதிய உபதபால் நிலையம் ஒன்றை அமைக்க தபால் தந்தி அமைச்சர் திரு செ. குமாரசூரியர் அனுமதி வழங்கியுள்ளார். இதற்கான உபகரணங்கள் புங்குடுதீவுக்கு வந்து சேர்ந்துள்ளதுடன் தபாலதிபருக்கானவிண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

தீர்மானம்

உடுப்பிட்டி, விநாயகர் ஒடுக்கரை ஸ்ரீலக்ஷ்மி கதிரர் கட்சிக் கிளைக் கூட்டம் திரு. நா. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது மட பகுதியில் குடியேற்ற வாசிகளாக கைவிடப்பட்டு வீணேகிடக்கும் நிலங்களில் கைத்தொழில், மைத்தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள புனரமைப்புத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோதியதாக விவசாயிகளும் கைகிளுக்கும் சேதமேற்பட்டது. அடுத்த நாள் ஒரு லாரிஞல் மோதப்பட்டு சைக்கிளிலிருந்து விழப்பட்ட வயோதிபர் ஒருவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பாக். அரபு அகதிகளுக்கு அமெரிக்க உதவி கிடைக்கும்!

மனிதாபிமான உதவி நிதிக்கு மட்டும் சென்ட் அங்கீகாரம்

வாஷிங்டன், நவ. 11

வெளிநாடுகளுக்கு மனிதாபிமானப் பணிகளுக்கு மட்டும் 110 கோடி டாலருக்கான அமெரிக்க உதவித் தொகையை அமெரிக்க செனட் அங்கீகரித்துள்ளது

வெளிநாடுகளுக்கு அமெரிக்கா அளித்துவந்த நிதி உதவித் தொகையை அமெரிக்க செனட் சபை ஏற்றுக் கொண்டுள்ளது. கடந்த இரு வாரங்களுக்கு முன் இந்த உதவித் தொகைக்கான அனுமதியை செனட் நிராகரித்தது. இதனால் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் சர்வதேச உதவி நிறுவனங்கள் தங்கள் பணிகளைச் செய்ய முடியாது தவித்தன. இந்த உதவித் தொகையில் உலகில் வாழும் பல லட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள் என்று ஐ.நா. வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டது

இந்த நிதி உதவித் தொகையை செனட் திரும்பவும் மறுபரிசீலனை செய்யவேண்டுமென அதிபர் நிக்சனும் வெளியுறவு அமைச்சர் திரு. ரோஜர்சும் செனட்டை கேட்டுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பின் இப்பொழுது மனிதாபிமானமான விஷயங்களுக்கு மட்டும் உதவி அளிப்பதற்கு வேண்டிய குறைந்த தொகைக்கான உதவித் திட்டத்தை செனட் சபை அங்கீகரித்துள்ளது. 110 கோடி டாலருக்கான இந்த உதவித் தொகை அங்கீகரிப்பினால் இந்தியாவுக்கு வந்திருக்கும் கிழக்கு வங்க அகதிகளுக்கும் அரபு அகதிகளுக்கும் கிடைத்துவந்த உதவிகள் தொடர்ந்தும் கிடைப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது

கடந்த சில நாட்களாக நிதியுதவி கிடைக்காமையினால் செயல்படாதிருந்த சர்வதேச ஸ்தாபனங்கள் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு வழி ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. உயர் அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

பிரஞ்சு அதிபருக்கு பிரஷ்னேவ் அழைப்பு

பாரிஸ், நவம்பர் 11

பிரெஞ்சு ஜனாதிபதி பொம்பிடுவைச் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யுமாறு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் லியனித் பிரஷ்னேவ் அழைத்துள்ளார் என்று அதிகார பூர்வமான தகவல்கள் கூறுகின்றன.

பிரெஞ்சுப் பிரதமர் ஜாக்கே சபான்-தெல்மாஸ் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யவேண்டும் என்று சோவியத் அரசு முன்னர் விடுத்த அழைப்பை லியனித் பிரஷ்னேவ் இப்பொழுது மறுபடியும் விடுத்தார். இவர்களது விஜயங்களுக்கான திகதிகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

64 பிரயாணிகளுடன் விமானத்தை காணவில்லை

ஜகார்த்தா, நவம்பர் 11

இந்தோனேஷிய விமானமொன்று காணாமற்போய் விட்டது. இந்த விமானத்தில் 64 பிரயாணிகள் இருந்தனர். இந்த விமானம் பாலம்பூரிலிருந்து ஜகார்த்தாவுக்குப் போய்க் கொண்டிருந்த பொழுதே காணாமற்போனது. இவ்விமானத்தைத் தேடும்பணியில் இந்தோனேஷிய விமானப் படை ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நினைவு அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களின் மத்தியிலே வாழ்ந்து கொடைவள்ளல் என்றழைக்கப்பட்ட மர்ஹூம் யூ. எம். ஐத்தரூஸின் 4-வது சிரார்த்த நினைவுவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. அன்னாருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ் டைகர் விளையாட்டுக் கழகத்தின் சார்பாக ஜின்னா மைதானத்தில் நடைபெறும் இவ் வைபவத்தில் பி. ப. 2 மணி தொடக்கம் பல விசேஷ நிகழ்ச்சிகளுடன் சமாதானக் கூடம் கலந்து இழுத்தல் முதலியவைகள் இடம் பெறும்,

பிரதம அதிதிகளாக யாழ் நகர் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசேப், யாழ் காரியாதிகாரி திரு. ஏச். சுபுல்லா நாயகம் குவாஸி எம். எம். மக்தூம், மாவட்டக் காணி அதிகாரி ஜனாப் எம். எம். மக்பூல் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

பொ. இரத்தினமும் திரு. கு. வி. தம்பித்துரையின் படத்தை நீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ப. சதிரவேலுவும் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

'வங்காளப் பிரச்னை தீர்க்கப்படவேண்டியது அவசியம்'

மேற்கு ஜேர்மனி அதிபர் வலியுறுத்து

பொன், நவ. 11

வங்காள தேசப் பிரச்னையை உடனடியாகத் தீர்த்துவைக்கவேண்டிய அவசியத்தை மேற்கு ஜேர்மனி அதிபர் திரு. வில்லி பிராண்ட் வலியுறுத்தியுள்ளார்.

மேற்கு ஜேர்மனித் தலைநகரான பொன்னிலிருந்து 26 மைலை மீற்றர் தொலைவிலுள்ள ஓரிடத்தில் இந்தியப் பிரதமர் திருமதி காந்திக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின்பொழுது பேசுகையிலேயே திரு. பிராண்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய வில்லி பிராண்ட் வங்காள தேசப் பிரச்னை, பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரமென்றும், அது இந்திய-பாகிஸ்தான் விவகாரமல்லவென்றும், அதில் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கேற்ற வழிவகைகளைப் பாகிஸ்தான் அரசினர் ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கூறினார்.

திருமதி காந்தியும், திரு வில்லி பிராண்டும் 2 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். முதல் அவர்கள் நடத்திய 45 நிமிட ஆலோசனையின்போது இரு தலைவர்களையுந் தவிர வேறு அதிகாரிகள் உடன் இருக்கவில்லை.

இந்திரா பேச்சு

இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பிரதமர் இந்திரா பேசுகையில், இந்தியா எப்பொழுதும் அமைதிவழியே விரும்புகிறது. வங்காளப் பிரச்னை, இந்திய பாகிஸ்தான் பிரச்னையல்ல. வங்காளத் தலைவர்களுடன் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகாணவேண்டும் என்று கூறினார்.

இந்திய-சோவியத் ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிட்டவர், இந்த ஒப்பந்தம் செய்துகொண்டதன் மூலம் இந்தியா தனது தடுநிலையைக் கொள்கையைக் கைவிடவில்லை என்றார். இந்தச் முத்திரப் பிரதேசம் அமைதிப் பிரதேசமாக இருக்கவேண்டும் என்பதே இந்தியாவின் கொள்கை என்று மேலும் அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய பிரதமர் மீண்டும் கடிதம்

வங்காள தேசப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு ஆஸ்திரேலியப் பிரதமர் பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகானுக்கு மீண்டும் கடிதம் ஒன்று எழுதியிருப்பதாக ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. பவர் தெரிவித்தார்.

ரோடீஷிய விஜயம் பற்றி ஹியூம் விளக்கம்

லண்டன், நவ. 11

ரோடீஷியாவுக்கு தான் போவதற்கான காரணங்களை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. கே. ஹெக்கி டக்ளஸ் ஹியூம் பிரிட்டிஷ் மக்கள் சபையில் தெரிவித்தார்

ரோடீஷியா விவகாரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் வெற்றி பெறவில்லை என்பதை அவர் சபையில் ஏற்றுக்கொண்டார்

மக்கள் சபையில் திரு. ஹியூம் தொடர்ந்து பேசுகையில், ரோடீஷியாவிலுள்ள பிரச்னையில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினரிடையேயும் உள்ள வேற்றுமைகள் இப்பொழுது குறைந்துவருகின்றன. அங்குள்ள நிலைமை மிகவும் துன்பகரமானதுதான். ஆனாலும் அங்கு சமரச முடிவொன்றைக்காண மீண்டும் முயல்வதில் தவறில்லை எனக் குறிப்பிட்டார்

ஸ்மித் பேச்சு

ரோடீஷிய குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட 6-வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. இதனை ஒட்டி ரோடீஷிய தலைவர் திரு. இயன் ஸ்மித் நாட்டு மக்களுக்கு வானொலியில் உரை நிகழ்த்தினார். அன்னார் இவ்வார இறுதியில் ரோடீஷியாவுக்குச் செல்லும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் அலெக் டக்ளஸ் ஹியூமின் விஜயம் பற்றியோ பேச்சுவார்த்தை பற்றியோ எதுவும் தெரிவிக்கவில்லை

சிலியில் காஸ்ரோ

சந்தியாகோ, நவ. 11

கியூபா பிரதமர் பெடரல் காஸ்ரோ சிலி நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார். கடந்த 12 ஆண்டுகளில் தென் அமெரிக்க நாடொன்றுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

கியூபாவுடன் தொடர்பற்றிருந்த சிலிநாடு இப்பொழுது இருக்கும் அதிபரின் காலத்திலேயே மீண்டும் கியூபாவுடன் தொடர்பு ஏற்படுத்தித் கொண்டது. இதைத் தொடர்ந்து இப்பொழுது திரு. காஸ்ரோ சாந்தியாகோவுக்கு விஜயம் செய்துள்ளார்.

திரு. காஸ்ரோ சாந்தியாகோ வந்திறங்கியதும் அவரை சிலி அதிபர் உட்பட பல உயர் அதிகாரிகள் வரவேற்றனர். அவர் கார் மூலமாக அழைத்துச் செல்லப்பட்ட பொழுது, மக்கள் மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர்.

உருவப்படங்கள் திரை நீக்கம்

ஊரதீவு, வியாழன்

புங்குடுதீவுக் கிராமசபையின் தலைவர்களாக இருந்து காலஞ்சென்ற திருவாளர்கள் கு. வி. தம்பித்துரை, க. செல்வத்துரை, எக் சபாரத்தினம் ஆகியோரது உருவப் படங்கள் மேற்படி கிராம சபை மண்டபத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட விருக்கின்றன

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ. நல்லைநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் திரு. க. செல்வத்துரையின் படத்தை தமிழரசுக்கட்சி தலைவரான திரு வ. நவரத்தினமும் திரு எஸ் சபாரத்தினத்தின் படத்தை நீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினமும் திரு கு. வி. தம்பித்துரையின் படத்தை நீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ப. சதிரவேலுவும் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

வெங்காய உத்தரவாத விலை உயர்வைவெளியிடவேண்டும்

மாவிட்டபுரம், வியாழன்

நாட்டின் வெங்காயத் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டுமானால் வெங்காயத்தை விவசாயிகள் பயிரிடமுன் உத்தரவாதவிலை உயர்வை வெளியிடவேண்டும் என்று வடமராட்சி வினை பொருள் உற்பத்தியாளர் சமாசத் தலைவர் திரு. என். சி. சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்சமயம் மேற்கொள்ளப்படவிருக்கும் வெங்காயச் செய்கை குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அவர் மேலும் தமது கோரிக்கை தெரிவித்துள்ளதாவது:-

"வருகிற போகத்துக்கு வெங்காயச் செய்கையை ஆரம்பிப்பதற்காக இப்பொழுது விவசாயிகள் விதை வெங்காயம் தேடியும் நிலத்தைப் பண்படுத்தவும் ஆரம்பித்துவிட்டனர். இச்சமயத்தில் வெங்காயத்தின் கட்டுப்படுத்தப்பட்ட விலையை அரசு உயர்த்த இரு மதங்கள் தெரிவிக்கப்படுகிறது. இப்படி விலை ஏற்றினால் வெங்காயச் செய்கை அதிகரிக்க வழி ஏற்படும். இந்த விலை உயர்வை விவசாயிகள் பயிர் செய்கை பண்ணமுன் வெளியிட்டால் தான் பலன் ஏற்படும். செய்கை பண்ணிய பின் விலை உயர்த்துவதால் உற்பத்தி பெருகாது.

விலை ஏற்றுவதுடன் விவசாய மந்திரியும், வர்த்தக மந்திரியும் வடபகுதிக்கு வந்து வெங்காயம் செய்கை பண்ணும் இடங்களுக்கு சென்று விவசாயிகளை உற்சாகம் ஊட்டவேண்டும் வெங்காயம் பயிரிடும் மாதமான மார்கழிக்குமுன் இவர்கள் இங்கு விவசாயிகளிடம் சென்று விலை உயர்த்துவது பற்றியும், அறுவடையாகும் வெங்காயத்தைக் கஷ்டமின்றி வாங்குவோம் என்பது பற்றியும் வாக்குறுதியளித்து செல்லுதல் அது மிக்க பலனைக் கொடுக்கும்.

போதிய பசளை இல்லையாம்

பருத்தித்துறை, வியாழன்

நெற் செய்கைக்கான போதிய பசளை இவ்வாண்டு கிடைக்கவில்லை என மராட்சிப் பயிர்ச் செய்கைக் குழுச் செயலாளர் திரு. மு. மார்க்கண்டு தெரிவித்தார். நெல் விதைப்புக் காலத்தில் நிலத்துக்கு வேண்டிய முக்கால்வீதப் பசளை இன்னும் கிடைக்கவில்லையாம். மேலும் நெற்காணி வரி செலுத்தியவர்களுக்கு மட்டுமே பசளை விநியோகிக்கப்படவேண்டுமென மாவட்ட விவசாய அதிகாரி உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பசளை நெருக்கடி இலங்கை முழுவதும் நிலவுவதாகவும் இதனால் இவ்வாண்டு நெற் செய்கை பாதிக்கப்படலாம் என்றும் அவர் கூறினார்.

மீண்டும் சகஜநிலை

மாவிட்டபுரம், வியாழன்

வலிவடக்குப் பகுதியில் மூடப்பட்டிருந்த கைகளுக்கிப்பு நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டு சகஜநிலை உருவாகியுள்ளது.

தெல்லிப்பளை சலூன் சங்கத்தினர் மாலுபாடின் திறந்துவிடுவது போல ஆம் பங்காச்சந்தியில் உள்ள சலூனும் சகலருக்கும் திறந்து விடப்பட்டுள்ளதாக சிறுபான்மை தமிழர்சபை பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

ஏழைகளுக்கு அரும்பணியாற்றியவர்!

யாழ். முஸ்லிம் மக்கள் மத்தியில் வாழ்ந்த ஏழைகளுக்காக அரும்பணியாற்றியவர் ஜனாப் யூ. எம். ஐத்தறூஸ். இறந்த கொடைவள்ளலும் சேவையின் சின்னமுமாகிய இப்பெரியார் இறைபடி சேர்ந்து இன்றுடன் 4 வருடங்கள் முடிவடைந்தாலும் அன்னார் ஆற்றிய சேவைகள் மனதை விட்டு அகலவில்லை. அன்னாரை அவ்வப்பொழுது நினைவு கருதல் சமூகாயத்தின் கடமையாகும்.

அன்பு இரக்கம் நன்றி நன்றியுணர்வும் உள்ளவராக மர்ஹும் ஜனாப் யூ. எம். ஐத்தறூஸ் தன்னலமற்ற பேருதவிகளை நம்சமூகத்திற்கு மட்டுமன்றிப் பிற சமூகத்திற்கும் ஆற்றினார். எதனாலோ நம்பகுதிக்கு விஜயம்செய்த பெரியார்கள் "ஜனாப் ஐத்தறூஸ் அவர்கள் வாழ் முஸ்லிம் மத்தியில் வாழ்கின்றதே பெரும் பெருமை" என்று வாயார வாழ்த்தினார்கள்.

நம் சமூகத்தில் அடிக்கடி கஷ்டிகளாகார, பொருளாதார பிரச்னைகள் தோன்றிய சமயத்தில் மனம் சலியாது, முகம் கோணாது அவற்றைத் தீர்த்து வைத்த மனிதனை எவரும் மறக்கமுடியாது. உதிரானிக் கஷ்டிகளுக்கு இவர் பெரும் தொண்டாற்றியுள்ளார். கஷ்டிகளின் மதிலைக்கட்டிக் கொடுத்தும் அதன் முன்னாயில் "கேற்றை"யும் செய்து கொடுத்தார். மண்தும்பான் மஸ்ஜிதின் சீர்கேடான நிலைகண்டு இரவுபகலாகத் தானே அதன் சீர்கேட்டைப் போக்கினார். வாழ் முஸ்லிம்களின் சரித்திரத்தில் முதல்முறையாக நடாத்தப்பட்ட யாழ். முஸ்லிம் இலவசமில கல்விழா வெற்றியீட்டியதும் அன்னாரின் பேருதவியாலேதான் என்பதையாரும் மறக்கமுடியாது.

இத்தகைய பெரியார் இன்று எம்மத்தியில் இல்லாவிட்டாலும் அவரின் சேவை அவரை என்றென்றும் நம்மனதில் நின்று அகலவிடாது.

—ஜனாப் எம். ஈ. ஷாஹுல்.

பல்கலைக்கழக அனுமதி

"யாழ்ப்பாணம் பற்றி நாம் கவலைப்படக்கூடாது"

வாலிப்டபுரம், வியாழன் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் தகுதி அடிப்படையில் மாவட்டரீதியாக தெரிவு செய்யப்படவிருக்கின்றனர். இதனால் நாட்டின் சகலபகுதியிலும் உள்ள மாணவர்களுக்கும் உயர்கல்வி பெறக்கூடியவாய்ப்புக்கிடைக்கும். இத்திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணப் பகுதிக்குக் குறைந்த இடம் ஒதுக்கப்படுவதையிட்டு நாம் கவலைபடக்கூடாது.

இவ்வாறு கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு ஆர். பாஸ்கரலிங்கம் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சேவைநலன் பாராட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாஜனாவில் 25 ஆண்டு அதிபராகப் பணியாற்றியமையை பாராட்டும் வகையில் அமைந்த இவ்விழாவில் அதிபர் ஜெயரத்தினத்தை புகழ்ந்து பேசிய பாஸ்கரலிங்கம் மேலும் கூறியதாவது:-

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். இனிமாவட்டரீதியாக தகுதி அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படவிருக்கின்றனர். இதனால் ஒருபகுதியில் தகுதிஉள்ள மாணவர்கள் இருந்தால் சகலரையும் தெரிவுசெய்ய வில்லை என்று குறைகூறக்கூடாது. நாட்டில் உள்ள சகல பகுதி மக்களும் பயன்பெற உதவும் இத்திட்டத்தைச் சகலரும் ஆதரிக்கவேண்டும்.

யாழ்ப்பாணப் பகுதி கல்வித்தரத்தில் முன்னேறிய பகுதி. புதிய திட்டப்படி இங்கு குறைந்த மாணவர் தெரிவுசெய்யப் படுகிறார்கள் என்று மனவே தனை அடையக் கூடாது' என்றார்.

சாங்கேசன்துறைமகா வித்தியாலயம் பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில், தமிழ் மாணவர்களுக்கு தகுதிஅடிப்படையில் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்காது போனால் அவர்களுக்குவெளி நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் இடம் தேடிக் கொடுக்க முயல்வோம்' என்றார்.

சாவகச்சேரியில் திருட்டு அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், வெள்ளி சாவகச்சேரி பகுதியில் பகலிலும் திருடர்கள் தொல்லை அதிகரித்துள்ளது. சாவகச்சேரி பொலிஸார் கிராம சேவகர்களின் உதவியுடன் இத்திருட்டுச் சம்பவங்களை கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

மீசாலையில் உள்ள ஆலி கோயிலுக்குள் பகல் 11 மணியளவில் கூரை பிரித்துப் புகுந்த திருடர்கள், தங்கள் கொண்டுசென்ற சாக்குகளை உள்ளே போட்டுவிட்டு தப்பிச்சென்றுவிட்டனர் என்று கூறப்படுகிறது.

நுணாவிலில் ஆசிரியர் ஒருவரின் வீட்டிற்குள் பகல் நேரத்தில் புகுந்த திருடர் நகைகளையும், ரொக்கப் பணத்தையும் திருடிச்சென்றுள்ளனர். இது சம்பந்தமாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

கொடிகாமம் சந்தைப்பகுதியில், ஒரே ஒன்றுக்குள் ரொக்கப்பணமும், மோதிரங்களும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டதைத்தொடர்ந்து, பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்ததோடு திருடப்பட்ட பொருளையும் கைப்பற்றியுள்ளனர். மற்றும் சில கடைகளிலும் வீடுகளிலும் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

(மு வி ம)

நிர்வாகிகள் தெரிவு

உடுப்பிட்டி, வியாழன் இலக்கைக் கூட்டுறவுப் பரிசோதனை கழகம் 5 வது வருடாந்த மகாநாட்டில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்- திரு ஆர். யோகநாதன், உப தலைவர்- திரு எஸ். செபரத்தினம், காரியதரிசி-திரு மு ஜெயராசசிங்கம். உப காரியதரிசி-திரு. பி. விக்கிரகராயகம், தகவல் காரி-திரு எஸ் லிங்கநாதன்

நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்கள் திருவாளர்கள்- பி. ஆறுமுகம் பிரகாசன், எஸ். ஜோசப், எஸ் தவநாதன், பி கோவிந்தன், எஸ் கனகசபாபதி, சி இராமலிங்கம், ஏ. கப்பிரமணியசர்மா.

இந்நிர்வாகிகள் தெரிவு பொலிஸ் பந்தோபஸ்துடன் வாக்களிப்பு மூலம் நடைபெற்றது.

0 0 0

உடுப்பிட்டி, வியா. கரவெட்டி கிழக்கு யார்க்கு விநாயகர் கிரிக்கெட் சங்கப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் புதிய வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்- திரு த வடிவேலு, செயலாளர்-திரு ஆ. நமசிவாயம், பொருளாளர்-திரு வே கனகசபை

எம்டுப்பேரூடகிய நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி தொட்டிலடி சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போசகர்- த. பொன்னம்பலம், தலைவர்- க சதாசாந்தன், உபதலைவர்- மு நடராசா, இணைச் செயலாளர்கள்- க இராசலிங்கம், வ கனகசிங்கம், பொருளாளர்-வி பாலசுந்திரம், கணக்குப் பரிசோதகர்- க நவராசா, நிலைய பொறுப்பாளர் மு தேவராசா.

க சுகலிங்கம், க திருச்செம்பலம், சி சிவப்பிரகாசம், அ கனகபாலன் ஆ நடராசா மு தேவராசா க நவரத்தினம் த தவராசா ஆகியோர் நிர்வாகஉறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி தொல்புரம் இந்துசமய விருத்திச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு வே. காரத்திகேசு தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்- வே. காரத்திகேசு, உப தலைவர்கள்-சே ஆறுமுகம், சி பரமலிங்கம், செயலாளர்-சண்முகதாசா, உதவிச் செயலாளர்- சொ சோதிநந்தன், பொருளாளர்-திரு கு கணபதிப்பிள்ளை. நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐந்து பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

வாரதீவு, வியா புலுகுடுதீவு பெடுக்காடு கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் பனம் பொருள் விற்பனவு கற்பதற்கான நிலையமொன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. பி நடராசா செய்துள்ளார்.

முற்போக்கு அணிகளுடன் இணைந்தே உரிமைபெறலாம்

வாலிப்டபுரம், வியாழன் சமூகவிடுதலைக்கு தனியே ஏற்படக்கூடிய ஒன்றல்ல. ஒரு சமூகத்தின் மத்தியில் இருந்து ஏற்படக்கூடிய தார்மீக பொருளாதார எழுச்சியினால் புதிய பாதையை நோக்கிச் செலுத்தும் தத்துவார்த்த சித்தாந்தியினால் ஏற்படக்கூடிய விடுதலையே உண்மையான சமூக விடுதலையாகும்.

இவ்வாறு பாண்டியத்தாழ்வு சனசமூக நிலையத்தின் திறப்புவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு இ. செ. கந்தசாமி கூறினார்.

சனசமூக நிலையத்தை ஆசிரியர் வ. கந்தசாமி திறந்துவைத்தார்.

திரு. இ.செ. கந்தசாமி மேலும்பேசுகையில் உரிமை குறைந்தவர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் சமூகத்தில் முன்னேறத் துடித்துக் கொண்டிருப்பவர்களும் இந்நாட்டில் உள்ள ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்கு ஐக்கியப்பட்டு முற்போக்கு அணிகளுடன் இணைந்து செயல்படுவதில் மூலமே உண்மையான சமூகவிடுதலையையும் விமோசனத்தையும் பெறுவது சாத்தியமாகும்.

ஆசிரியர் வ. கந்தசாமி பேசுகையில் அரச நிர்வாகத்தில் மக்களுடன் கூடிய தொடர்பு கொள்ளக்கூடிய ஓர்சமூகத்தில் உண்மையான செயற்திறனையும் வளர்ச்சியையும் பிரதிபலிப்பதும் அந்தந்தப் பகுதிகளில் அமைகின்ற சனசமூக நிலையங்களையும் அதன் தலைமையையும் பொறுத்து உள்ளது என்றார்.

டாக்டர் திரு செ. நடராசா திரு பி. கதிராமத்தம் த. தவராத்தினம், செல்வி யோகமலர் செல்லப்பா, செல்வி மல்லிகா கப்பிரமணியம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

கலைநிகழ்ச்சிகளும் நிலையக் கலைஞர்களால் நடன நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

—

நெடுந்தீவு வள்ளுவர் விழா

நெடுந்தீவு, வியாழன் நெடுந்தீவு வள்ளுவர் மன்றத்தினரால் இரண்டாவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது.

முதல் நாள் விழாவை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. வை. இராசதினம் தொடக்கிவைத்தார். மாவிந்தியாவை ஆசிரியர் வள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார். இரண்டாம் நாள் விழாவுக்கு வலிகாமம் வடக்கு திரு. ஏ. சேதுராசா தலைமைதாங்கினார்.

'நாவலர் தோன்றுவிட்டால்'

புத்தளம், வியாழன் 'நாவலர் பெருமான் தோன்றிவிட்டால் இன்று நாம் தமிழ் மக்கள். சைவர்களென்று கூறிக் கொள்ளும் பாக்கியமே கிட்டாதிருக்கமுடியாது. நாவலர் செய்த அரும்பணிகளை தொண்டுகளை ஆன்றோர்கள் நினைவுபடுத்த வேண்டும் என்ற முன்னணியில் நின்று உழைத்தவராக செல்லக்கிளி ஆசிரியர் திரு. இரத்தினசபாபதியின் பெரு முயற்சியால் நாவலர் முத்திரை வெளியீடு! சைவம் வாழ்க நாவலருக்கு எழுத்திலே முத்திரை வெளியிட்ட வகையில் வரலாற்றிலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது. அதற்கான வழிவகைகளைத் தந்த ஜனாதிபதி முன்னாள் அரசாங்கத்தக்கும் குறிப்பாக தபால் தந்தப்பகுதி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கும் சைவ மக்கள் அனைவருமே நன்றியுடையவர்களாகஇருக்கவேண்டும்' என்று புத்தளம் இந்துகாலச்சுவடு மண்டபத்தில் நடந்த நாவலர் முத்திரை வெளியீடுகுறித்த நடாத்தப்பட்ட விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய நீதிபதி திரு. கே. பாலகிருஷ்ணர் கூறினார்

இந்துமத சபையின் கலைச்சாரக்குழு திரு மு சி ஸ்ரீ தயானன் நாவலர் உருவப் படத்துக்கு சாமரை வீசுதி விழாவை ஆரம்பித்தார்.

—

அமைச்சருக்கு நன்றி

வாரதீவு, வியாழன் சைவமும் தமிழும் வளர்த்த நல்லூர்நகர் நாவலருக்கு ஞாபகார்த்த முத்திரை வெளியிட்டதன் மூலம் தமிழ் மக்களின் நன்றியை அரசாங்கம் சம்பாதித்துள்ளதாக புலுகுடுதீவு இந்து இளைஞர் சபை தனது வாராந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. இச் செயலுக்காக, இச் சபையும், தபால் தந்திப்பகுதி அமைச்சர் குமாரசூரியருக்கு நன்றி தெரிவித்துள்ளது.

பல்கேரியாவில் உயர் கல்வி

யாழ்ப்பாணம், வெள்ளி திரு. வயித்திலிங்கம் சந்திரராஜா பல்கேரி மக்கள் குடியரசு அரசாங்கத்தின் உபகாரச் சம்பளத்தின் கீழ் எரிபொருள் பொறியல் துறையில் 5 வருட படிப்பிற்காக பல்கேரியா சென்றுள்ளார்.

இவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவரும், கோப்பாயைச் சேர்ந்த திரு. ஜி. வயித்திலிங்கம், திருமதி நவமணி வயித்திலிங்கத்தினதும் மூன்றாவது புதல்வருமாவார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 12—11—71
(12-11-71)

(செய்திகள் காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7 00 இசைச்சித்திரம், 7-15 பண்ணிசைத்தமிழ், 7-45 குரல்வளை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி

இரவு 6-10 வாத்திய இசை 6-15 உரையாடல் 6-30 தோத்திரப்பாடல்கள் 7-00 பெண்ணுலகம், 7-30 வெளிநாட்டுச் செய்திகள் 7-35 ஹெல்லிசைக்கோஷ்டி, 7-45 முத்திநெறி, 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி, 9-25 பேச்சு, 9-30 பஜட்டு

வாஷிங்டனில் தமிழக முதல்வர்

வாஷிங்டன், நவ 11

தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி வாஷிங்டன் வந்து சேர்ந்தார் தமிழக முதல்வரை வாஷிங்டன் விமான நிலையத்தில் அமெரிக்காவிலுள்ள பாரத கமிஷனர் எம். ஜே. ஷா வரவேற்றார்

தமிழக முதல்வர் இன்று அமெரிக்க வெளிவிவகார இலாகா அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பின் ஏற்ற தமிழக முதல்வர் அங்கு சென்றுள்ளார். இவருடைய மருமகன் முரசொலி மாறனும் தனிப்பட்ட முறையில் இவருடன் வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

விவசாயம்பற்றி

வெளிநாடுகளில் பயிற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

'செங்கதிர்' மாத சஞ்சிகை ஆசிரியரும், செங்கதிர் செல்வர் பண்ணை நிர்வாகத் திட்ட அதிபருமான திரு. பி. கே. பொன்னம்பலம் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து அமெரிக்காவுக்குச் செல்வார்.

பிலிப்பைன்ஸ், அமெரிக்கா ஆகிய அரசாங்கங்கள் இவரைத் தமது நாடுகளுக்கு அழைத்திருந்தன.

பிலிப்பைன்ஸிலுள்ள சமூக நலச் சங்கங்களையும், மற்றும் விவசாயப் பண்ணை போன்றவற்றுக்கும் நேரில் விஜயம் செய்து பார்வையிடுவார். இக்கு 6 மாதகாலம் தங்கியிருந்துவிட்டு அமெரிக்காவுக்குச் செல்வார். அங்கும் விவசாய பண்ணைகளில் பயிற்சி பெறுவார்.

சொழும்புத்துறை நகரைச் சேர்ந்த இவர் காலஞ்சென்ற திரு. குமாரசூரியரதும், திருமதி சிவசோதி குமாரசூரியரதும் சிரேஷ்ட புதல்வராவர்.

நெசவுநூலி தட்டுப்பாடு: கி. ச. தலைவர் யோசனை

தெல்லிப்பளை வெள்ளி

"நெசவுத்தொழிலை நம்பி வாழ்ந்த தொழிலாளர்கள் நெய்வதற்குநூலின்றி இருப்பதால், மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்க்கையைச் செலுத்தவேண்டியிருக்கிறது. இவர்கள் பரம்பரையாக, குடிசைக்கைத்தொழிலாக குழித்தறியில் வேலை செய்து, தமது வாழ்க்கையைச் செலுத்திவந்தனர். கடந்த வருடமாக போதிய நூலின்றி தொழிலாளர் கஷ்டப்படவேண்டியுள்ளது. இத்தெடுக்கடியான நிலையை நீக்க ஒரு ஜக்கிய சங்கத்தை அமைத்தல் வேண்டும்."

தெல்லிப்பளை கிராம சபைத் தலைவர் திரு. இ. நிறைம்பரநாதன், கைத்தறி நெசவாளர் சங்க ஆங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசையில், நெசவாளர்கள் தொழில் செய்வதற்கு நூல் இல்லாது வாழ்க்கையில் கஷ்டப்படுவதை நேரிலாணுகிறபொழுது மிகவும் வருத்தமடைகின்றேன். தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்கஒரேவழி ஒரு ஜக்கிய சங்கத்தை அமைத்தல் வேண்டும் நூல், சாயம் போன்ற மூலப்பொருட்களையும், ஏனைய உபபொருட்களையும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கமூலம் எடுத்து அச்சங்கத்தின் மூலம் சந்தைப்படுத்தினால் தான் தனிப்பட்ட நெசவாளரின் குறைதீரும்" என்று குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. பொன். செல்வரத்தினம் பேசையில், நெசவுத் தொழிலையே நம்பி வாழ்ந்த நம் சமூகத்தினர் நெய்வதற்குப் போதிய நூலின்றிக் கஷ்டப்படுகின்றனர். இக்கஷ்டநிலையைப்போக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளவிட்டால், தொழிலாளர் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு வறுமை நிலையை அடைய வேண்டியேற்படும் என்று குறிப்பிட்டார் மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டு, சிறுகைத்தொழில் அதிபர், அரசாங்க அதிபர் ஆகியோரைப் பேட்டிகண்டு சமர்ப்பிப்பதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆழமான 'பட்ஜட்'

(6-ம பக்கத் தொடர்ச்சி)

வாகச் செருப்புத்தேய நடக்கும் உபத்திரவம்இனி இருக்காது என்று புளகாங்கிதமுறுகிறார் ஒருமகளிர்குப்பத்தினவர்.

ஐஸ்ஜூஸ்

ஐஸ்பழ பிஸிநெஸ் டல்லடிக்கப் போகிறது, என்று கூறுகிறார் திரு எம் லாபீர் சேனி இந்த வரவு இரண்டிப்பு விலையாகி விட்டதாலும், மலிவுரகங்களை இன்றுடன் நிறுத்தி விடப்போகிறோம்.

மழை காலத்தில் வழமையாகவே டல் அடிக்கும் ஆனாலது பிஸிநெஸ் சேனித் தடுப்பாட்டினால் மேலும் டல்லடிக்கப் போவதாகவென்னிக்கொண்டே நாமும் என் கண்களில் முட்டைதூக்கும் தொழிலாளி ஒருவர் தெரிவிக்கிறார்,

"பட்ஜட்டைப்பற்றிஎன்ன நினைக்கிறீர்?'

'சார்ர்தான் போய்வர!' என்று துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டே போய்விடுகிறார் அவர். ஒரு இருத்தல் பாணுக்கு மேலதிகமாக ஒரு முட்டை சமக்க வேண்டுமே என்ற கவலை அவருக்கு.

ஆழமான பட்ஜட்

'பென்ஷனுக்குப் பென்ஷன்' உச்ச வருமானம், காணி உச்சவரம்பு போன்றவையெல்லாம் சோஷலிச இலக்கை அடைய எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளே, என்று கூறிய ஒரு பழம்பெரும் பொருளாதார நிபுணர் மேற்கண்ட வார்த்தைகளை அழுத்தமாகக் கூறினார்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இதுஓர் அதிர்ச்சி தரக்கூடிய பட்ஜட் போலத் தோன்றலாம்; ஆனால் நிதி யமைச்சர் மிக ஆழமான சிந்தனையின் பின்னரே இதை தயாரித்திருக்கிறார்.

"என் வாழ்நாள் முழுவதும்ஏழைகளினதும்நேர்மையானவர்களினதும் வாழ்வைக் கஷ்டங்களை இலகுவாக்களே- உழைத்திருக்கிறேன். ஆனால் இன்று அவர்கள் மீதே சில மேலதிக கஷ்டங்களை சுமத்த வேண்டியவனாகியுள்ளேன், இருப்பினும் கடுமையான மனக் கஷ்டத்துடன் ஓர் இனிய எதிர்காலத்துக்காக நான் செயற்படவேண்டியுள்ளது. என்ற நிதியமைச்சரின் வேண்டுகோள் இது ஓர் தீர்க்கமான திருப்திகரமான பட்ஜட் என்பதைத் தான் காட்டுகிறது.

—த. இந்திரலிங்கம்

உதவி கல்வி அமைச்சர் விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

உதவிக் கல்வியமைச்சர் திரு. பி. வை. துடாவை வவுனியா, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கு நாளை சனிக்கிழமை விஜயம்செய்ய விருக்கிறார். அங்கு இலங்கை தொழிலாளர் தமிழர் மகாசபை வவுனியாக் கிளையும் புதுக்குடியிருப்பு ரோ. க. பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் வரவேற்பளிக்க அளிக்கவிருக்கின்றனர்.

வண்பிதா ஆர். எம். ஜி. நேசநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்துக்கு பிரதமகிருத்தியர்களாக மகாசபைத் தலைவரும்நியமன எம். பி.யுமான திரு. எம். சி. சுப்பிரமணியம், வவுனியா பிரதம கல்விஅதிகாரி திரு. தி. மாணிக்கவாசகர் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

கதிரமலை பத்திரகாளி அம்மன் கோவில் மண்டபத்தில் பண்டிதர் இரா. சிவலிங்கப்பிரணவம் இன்று இரவு சிறப்புரை ஆற்றுவார். திரு. வே. நடராசா தலைமைவகிப்பார் விசேஷ அபிஷேகமும், அன்னதானமும் நடைபெறும்.

(கதி நிரு)

0 0 0

வடபிரதேச ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச் சபை அதிகத்தலைவர்களின் பொதுக் கூட்டம் இன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் பல கல்விமான்களும் ஆசிரியர் சங்கத் தலைவர்களும் கலந்துகொள்வர்.

கூட்டுறவுமுறையில் வளர்ச்சி பெறுவோம்

சங்கானை, கிளா.

ஒரமிய வகுதி, மீன்பிடி அபிவிருத்தி, கூட்டுறவுப் பண்ணை போன்றவை கூட்டுறவு அடிப்படையிலேயே இயங்கவேண்டும். வேற்று மனப்பான்மைகளை களைந்து ஒன்றுபட்டு இயங்கும் பக்சத்தில் மென்மேலும் கூட்டுறவு வளர்ச்சி பெற்று குறுகிய காலத்தில் மக்கள் பலன் பலனை அடையமுடியும்.

மேற்கண்டவாறு வவுனியா உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். இராமநாதன் வவுனியாக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நமக்கு அளிக்கப்பட்ட விருந்துபசார வைபவத்தில் நன்றி தெரிவித்து பேசையில் குறிப்பிட்டார்.

திரு. இராமநாதன் இடமாற்றம் பெற்றதை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்திற்கு திரு. கப்பிமணிய சர்மா தலைமை வகித்தார். உதவி ஆணையாளர் தொடர்ந்து பேசையில் கூறியதாவது:

'கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு நூறு இரண்டு ஏக்கர் காணியும் வேண்டிய உதவிகளும் செய்து கொடுப்போம் மானவர்களையேதான் கூட்டுறவு வளர்ச்சிக்கு உள்ளது ஆதலை பொறுப்புணர்ச்சியுடன் வளர்க்க வேண்டும் 'கூட்டுறவு வளர்ச்சியே ஊழியர் வளர்ச்சி ஊழியர் வளர்ச்சியே கூட்டுறவு வளர்ச்சி.

புதிய 'பட்ஜட்' ஏழைகளைப் பாதிக்குமாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"புதிய பட்ஜட் ஏழை மக்களை மிகவும் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது அரிசி, சீனி, மா, வைத்திய வசதி எல்லாவற்றுக்கும் ஏழை மக்கள் பணம் செலவழிக்கவேண்டிய நிலையை இந்த பட்ஜட் ஏற்படுத்தியுள்ளது. மரவரி நீக்கப்படுவதால் சீவல் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படப்போகிறார்கள். இதுவரை வேறுக்கூடிய ஒரு பட்ஜட் ஆகும்."

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஆ. அமிர்தலிங்கம் புதிய பட்ஜட் பற்றித் தமது அபிப்பிராயத்தை தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: "சீவல் தொழிலாளரின் கஷ்டத்தைப் போக்குவதற்குக் கூட்டுறவு முறையில் கள்ளுத் தவறணைகளைக் கொடுக்க முன்வரவேண்டும். சீவல் தொழிலாளர் சம்பளம் பெற்று வேலைசெய்யாமல் அவர்களே கூட்டுறவு முறையில் தவறணைகளை நடாத்த வழிசெய்யவேண்டும் என்றார்.

மகாசபை ஆராயும்

புதிய பட்ஜட் பற்றிச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை இன்று கூடி ஆராய இருப்பதாக மகாசபை உறுப்பினர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். மகாசபைத் தலைவரும், நியமன எம்.பி யுமான திரு. எம். சி. சுப்பிரமணியம் கொழும்பில் இருப்பதாலும் அவர் இன்று வந்ததும் பட்ஜட் பற்றி ஆராய்வதுமென அந்த உறுப்பினர் தெரிவித்தார்

யாழ்ப்பாண மாநகரப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நேற்றுப் பழைய விலைக்கே இரண்டாவது தொத்து அரிசி வழங்கப்பட்டது. மா, சீனி புதிய விலைக்கு நேற்று முதல் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சோதிய சீனி கலவிடுப்பில் இருப்பதாலும் சீனித் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் சக்க உத்திரவாதம் ஒருவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் செயலாளர் கருத்து

"புதிய பட்ஜட் பொது மக்களுக்குப் பெரும் கஷ்டத்தைக் கொடுப்பதாக இருக்கிறது சீனி, மா, அரிசி ஏழைமக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் அரிசியின் விலையைக் கூட்டினாலும் மாவின் விலையைக் கூட்டுவது சரியல்ல ஏனெனில் பல ஏழைகளின் வீடுகளில் மாத்தான் முன்று நேரமும் பிரதான உணவாக இருக்கிறது"

தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளை புதிய பட்ஜட் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சங்கரப்பிள்ளை மேலும் கூறியதாவது:

"சீனியைக் கிழமைக்கு ஒரு ருத்தல் வீதம் வழங்கி விடுகிறார்கள் அதை மாதத்திற்கு மேலும் ஒரு ருத்தல் சீனி கூட வழங்கியிருக்க லாம். பல ஏழைகளின் வீடுகளில் தேநீர் தான் காலை ஆகாரமாக இருந்துவருகின்றது.

இந்த பட்ஜட் மட்டுமல்ல இனிமேல் வரும் பட்ஜட்டுகளும் வணக்கஸ்தரர்களை மட்டுமன்றி ஏழைகளையும் பாதிக்குமென்பது இதிலிருந்து கணிக்கக்கூடியதாக இருக்கிறது. தனிப்பட்ட வியாபாரிகளும், ஏழைகளும் லாபம் பெறுமல் முழு லாபத்தையும் அரசாங்கம் தானே எடுக்கக்கூடிய வித்தில் எதிர்கால பட்ஜட்டுகள் இடம்பெறுமென்பது இந்த பட்ஜட்டிலிருந்து தெரிகிறது."

இடதுசாரிகள் கூட ஏற்க மறுக்கும் உண்மை

டாக்டர் பெரேரா விளக்கம்

கொழும்பு, வியாழன்

இலங்கை போன்ற ஒரு சிறுநாட்டின் பொருளாதாரவளம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தில் தான் தங்கியிருக்கிறதென்பதை சில இடதுசாரிகள் உணர்ந்துகொள்ள மறுக்கிறார்கள் என்று அமைச்சர் டாக்டர் எஸ். எம் பெரேரா வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசையில் கூறினார்.

மேலும் அவர் பேசையில் வெளிநாட்டு சர்வதேச வங்கிகள் உறுதி செய்தாலொழிய இலங்கை வங்கியின் கடன்பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வெளிநாட்டு வங்கிகளும் கம்பனிகளும் ஏற்க மறுக்கின்றன. மேற்காசிய எண்ணெய் உற்பத்தியாளர்கள் வெளிநாட்டுக் கம்பனிகள் விலை குறைப்பினால் எமது எண்ணெயின் விலையும் உயர்கிறது. இந்த உண்மைகளை இடதுசாரிகள் மறந்து விடுகிறார்கள். இந்நிலையில் உலகில் எமது சூழ்நிலைகள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மேலாக நாம் விரைந்து முன்னேற்றங்களை முடியாது. சிறு பிள்ளைகளார்கள் பெரிதாக ஒன்றையும் எதிர்பார்க்க மாட்டார்கள். அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் இலங்கையில் எந்த கம்பனியும் தொழில் நடத்த முடியாது. இதற்கான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும். கம்பனிகளின் இலக்குநர் சபைகளுக்கு அரசாங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இருக்கும். பிரிட்டன் ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேர்வதிலும் அரசாங்க வர்த்தக தூதுக்குழு சம்பந்தமான விஷயங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

உயர்கொள்வனவு செய்யும் கொம்பனிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இறக்குமதி ஏற்றுமதி வங்கி ஒன்று நிறுவப்படும் என்றார். (ச)

குழாய்நீர் திட்டம்

வருகிறதாம், வியாபுரிதூர்க் கிராமசபையின் ஒரு பகுதி வாசிய வாசகர்களுக்கு குழாய் நீர்த்திட்டம் ஒன்றை அமைத்துத் தரும்படி சேப்பாய் பராளுன்ன உறுப்பினர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும் புத்தூர்க் கிராமசபைத் தலைவர் திரு. சி. மு. திருநாவுக்கரசுவும் மத்திய அரசாங்கத்துக் கோரியுள்ளார். ஆண்மையில் கொழும்பில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சிமன்ற தலைவர்கள் மாநாட்டிலும் இவ்விடயம் எழுப்பப்படவுள்ளது. இத்திட்டத்தின்மூலம் வாதரவத்தையிலும் ஆண்மையிலுள்ள கிராமங்களிலும் விவசாயம் செழிபுற வழி பிறக்குமென்றும் வருடம் முழுவதும் மழையின் தங்கியிருக்காது பயிர் செய்ய முடியுமென்றும் நம்பப்படுகிறது

மணிவாக்கு

சிறிய விளக்கு அதிக தொலைவுக்குத் தன் ஒளி வைக் காட்டுவதுபோல, நற்செயல் சிறிதானும் மனுக்கு அது ஒளியாயிருக்கும்.

— ஷேக்ஸ்பியர்

சுழநாடு

Belonds National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box: 48 Jaffna Telephone: 389

வாரத்தொறும் வியாழனும் வெள்ளியும் ஐப்பசி மாதம் 26-ந் திகதி (12-11-71)

வரவு செலவுத் திட்டம் (1)

இன்றைய பொருளாதார நிலையையும் மனநிலையையும், பலவீன இயக்கம் காரணமாக நிலைக்கக் கடினமாக இருக்கும். இச்சமயத்தில் ஜனநாயக முறைப்படி நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து சமர்ப்பிக்க முடிந்தது பெரிய காரியம் தான். ஆனால் ஜனநாயகத்துக்கும் மக்களின் அமைதிக்கும் சந்திரனுக்குமேயெரிய ஆபத்து ஏற்படவிட்டது. அதை எல்லாம் ஒருவிதமாகச் சமாளித்து, அமைதியை நிலைநாட்டி, தன்டு விழும் இருநூறு கோடி ரூபாவையும் சரிக்கட்ட நிதியமைச்சர் முற்பட்டது சாதாரண வேலையன்று.

இப்பணியை நிறைவேற்றுவதில் செல்வந்தர்கள் மட்டுமன்றி எல்லா நடுத்தர குடும்பத்தாரும் பாதிக்கப்பட்டுள்ளார். இதுவரை தம் வாழ்நாளில் எளிய மக்களுக்குக் கஷ்டநிவாரணமளிப்பதே தமது குறிக்கோளாக இருந்து வந்தன தாகவும் அவர்களைப் பாதிக்கும் சில நடவடிக்கைகளை இப்போதாவதுக்க வேண்டி நேரிட்டதற்காகத் தாம் மிக மனக்கஷ்டமும் வருத்தமும் அடைவதாகவும் நிதியமைச்சர் உணர்ச்சியுடன் தெரிவித்தார். விரும்பத்தகாத சில நடவடிக்கைகள் எடுக்கப்படவிடுப்பின் அதற்கு நாட்டின் இக்கட்டான அசாதாரண நிலையே காரணமன்றி நிதியமைச்சரைக் குற்றம் சொல்வதற்கில்லை.

அரசிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழந்துவிடுவார்களோ என்றும் அஞ்சப்படுகிறது. நிலைமை மிகக் கஷ்டமாக இருந்தும் பண்டிட் அரசின் முதல் வரவு செலவுத் திட்டமாகவே தொடர்ந்து அமைக்கப்படும். இரண்டாவது வரவுத்தின் விலையை ஒரு ரூபாவுக்கு உயர்த்தவதென்றும் முடிவு செய்துள்ளனர். இத்துடன் மாவின் விலையும் உயர்த்தப்படுகிறது. சீனி பகிர்வு செய்யப்படுகிறது. உடன் அதிகப்படி சீனியின் விலை இரட்டிப்பாகியுள்ளது. அரிசி, மாவு, சீனி இம்மூன்றும் ஏழைகள் உண்டிட்டு பொதுமக்கள் பாவிப்பதாகும். இவற்றின் விலைஉயர்வைப் பற்றி பொதுமக்கள் கவலைக்கொள்ளாமுடியாது. வாழ்க்கைச் செலவில் பழுவாக ஏற்கனவே சுமத்தப்படும் எளிய நடுத்தர குடும்பத்தினருக்கு இப்புதிய நடவடிக்கைகள் புதிய வேலை அளிக்கும். என்றாலும் அவர்கள் நாட்டின் மேலான நலனைக்கருதி இந்தத் தியாகத்துக்குத் தயாராக இருக்க வேண்டும்.

அரிசி, மாவு, சீனி இம்மூன்றும் இறக்குமதிச் சரக்குகள். இவற்றைச் செலவழித்து வெளியேற்றி இவற்றை வாங்க வேண்டியுள்ளது. உலக மார்க்கெட்டில் இவற்றின் விலை கூடிக்கொண்டு போகின்றது. இந்நிலையில் நாட்டில் அரிசி, சீனி இவற்றின் உற்பத்தியைப் பெருக்க விசேஷ முயற்சிகளைச் செய்வதுடன் மாற்று உணவுகளைப் பாவித்து இவற்றின் உபயோகத்தைக் குறைத்துக் கொள்வது விவேகமாகும். உதாரணமாக பண்டாரத்திலிருந்து சீனியை உற்பத்தி செய்வதுடன் கரும்பு சாகுபடியையும் பெருக்கி சீனியின் தன்னிறைவு அடைய முயல வேண்டும். சீனி பாவிப்பைக் குறைத்துக் கொள்வது சாதாரணத்துக்கும் நல்லதென்றும் சொல்லப்படுகிறது. ஆகவே இப்புதிய நிலையற்றி மாடுக்கு முணுமுணுத்துக் கொண்டிருப்பதைவிட்டு, உண்நாட்டிலேயே கூடியமட்டும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதிலும் பொதுமக்களும் அரசாங்கமும் விசேஷ கவனம் காட்டுவதுதான் இன்றைய நெருக்கடியைச் சமாளிக்கக்கூடிய ஆக்க வழியாகும். இரட்டிப்பு ஆர்வத்துடன் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய இச்சந்தர்ப்பம் நமக்குப் பயன்படுவதாகவும் இருக்க வேண்டும்.

பஸ் பிரயாணிகள் புதிய கிளை சங்கம்

கஷ்டம்

பருத்தித்துறை, விபரம் 1969-ம் ஆண்டு பருத்தித்துறை இ. போ. ச. அதிகாரிகளுக்கும் வடமராட்சி பஸ் பிரயாணிகள் சங்கத்துக்குமிடையே நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் அமுல் நடத்தப்படாதிருப்பதால் பல பிரயாணிகள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர். உதாரணமாக பருத்தித்துறை பஸ்நிலையத்தில் பிரயாணிகளின் பார்வைக்கு நேர அட்டவணை இன்னும் வைக்கப்படவில்லை. கலைக் சந்திவிளக்கு தாண்டி ஓடிவிடப்படும் பாடசாலை மக்களை நடைமுறைக்கு வரவில்லை. ஒரு மாதத்தில் சேவைக்கு விடப்படும் பல பழுதடைந்தால் அப்பாதைக்கு வேறொரு பஸ் விடுவதில்லை. இப்பிரச்சினைகளைத் தீர்க்க சம்பந்தப்பட்ட இதர பஸ்பிரயாணிகள் சங்கங்களும் கூடப்படவிருப்பதாகத் தெரிகிறது.

கரவெட்டி மேனிஞ்சிமுனைப் பகுதி மக்களுக்கென வந்த நோக்குக் கட்டுறவுச் சங்கத்தை ஒன்று அண்மையில் திறந்தவைக்கப்பட்டது. இந்நிகழ்வை தீவுப் பகுதி காரியாதிகாரி திரு. பொ. நடராசா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

வாரதீவு, விபரம்.

தமிழருக்கு சிங்களத்தில் கடிதம்

நேற்று வெளியான 'சுழநாடு' ஆபீஸிலிருந்து ஒரு மணியளவே பார்சல் கிடைத்தது. அதில் நிதியமைச்சரின் பட்ஜட் பிரசுரமும் பிரதமமந்திரி சமர்ப்பித்த ஐந்தாண்டு திட்ட விபரமும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ரோனியோ செய்து புத்தகமாக அனுப்பப்பட்டிருந்தன. பிரதமர் முன்னுரையில் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டிருக்கிறார். தமிழ் பிரதியில் அவர் தமிழில் கையெழுத்திட்டிருந்தால்...!

அதிலுள்ளவை யெல்லாம் படித்து புரிந்து கொள்ள தமிழ் பல மணிநேரம் வேண்டும் என்றாலும் அவ்விரு பெரிய புத்தகங்களையும் பார்த்ததும் எனக்கு ஒரு சந்தோஷம் தமிழைப் புறக்கணிக்காமல் அதற்கும் சமமான இடம் அளித்ததுதான்.

இதே போல எல்லா விஷயங்களிலும் தமிழுக்கு சம இடம் அளித்தால் நாட்டுக்கு என்ன நஷ்டம்? கொழும்பிலே ஓர் அரசாங்க அதிகாரியிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. எல்லாம் சிங்களத்திலிருந்தன. ஒன்றும் புரியவில்லை. ஆத்திரம் அதிகமாக வந்தது. பின்னர் சிங்களம் தெரிந்தவரைத் தேடிப் பிடித்து அதைத் தெரிந்துகொள்ள வேண்டியதாயிற்று.

பார்லிமெண்ட் தமிழ் வேஜுக்கு மூன்று மொழிகளிலும் வெளியிடுகிறார்கள். ஏன் இதேமாதிரி பொதுமக்களுக்கும் செய்யப்படாது?

சிங்களம் தெரியாதவர்கள் இந்நாட்டில் லட்சக்கணக்கில் இருப்பது தெரிந்தும் சிங்களத்தில் மட்டுமே கடிதங்களை அனுப்புவது சரியோ!

தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் ஆதரவையும் பெற ஆவலாயுள்ள அரசாங்கம் இதைப்பற்றிக் கவனித்து, பார்லிமெண்டிலே செய்வதுபோல் கடிதங்களை தமிழிலும் அனுப்பினால்? என்று மனதில் ஏதேதோ எண்ணமெல்லாம் தோன்றின. தமிழ் எம். பி. மார்கள் கஷ்டிவேற்றுமையின்றி எல்லாரும் சேர்ந்து கேட்டால், இதை அரசாங்கம் மறுக்காதென்றே நம்புகிறேன். ஆனால் அவர்கள் சேருவார்களா?

0 0 0

பார்லிமெண்ட் மண்டபத்தில் ஏகாலத்தில் மொழி பெயர்க்கும் கருவியின் பழுதேற்பட்டதாம். அன்று நடவடிக்கைகளையெல்லாம் ஆங்கிலத்தில் நடத்தினார்களாம். சிங்களம் தெரியாத தமிழ் எம். பி. மார்களின் நன்மையைக் கருதி இம்மாறுதலைச் செய்தனர். ஆங்கிலம் தெரியாத சில சிங்கள எம். பி. மார்கள் உண்டு. என்றாலும் ஆங்கிலத்திலேயே அன்று சபை நடவடிக்கைகளை நடத்தினதும் யாருக்கு இதை ஆட்சேபிக்காததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதே உணர்ச்சியையும் நல்லெண்ணத்தையும் பொதுவாக மொழிப்பிரச்னையிலும் காட்டக்கூடியகாலம் வருமா? தமிழ் எம். பி. மார்கள் எல்லாரும் ஒற்றுமையாக இருந்தால், அவர்களது நியாயமான கோரிக்கையை அரசாங்கம் மறுக்காதென்றே மேற்குறித்த அதிகுறிகள் காட்டுவதாகவுள்ளன.

0 0 0

யாழ்ப்பாணத்திலிருந்து டாக்டர் கே. கனகரத்னம் எழுதுவதாவது:

"ஒருவாரத்துக்கு முன்பாக 50 வயதுள்ள ஓர் ஆசாமி, வெகுநாள் தெரிந்தவர் போல் சிரித்துக்கொண்டே வந்தார். விசுவபடு மாணிக்கப் பிள்ளையார் கோயிலைக் கட்டப்போவதாகக் கூறி ஆர்ச்சிதத்த பிரசுரங்களைக் கொடுத்தார். அதில் அவருடைய கையெழுத்துதான் இருந்தது. பலர் பெரும்தொகை கொடுத்திருந்தார்கள். நானும் ஒரு சிறுதொகை கொடுத்தேன். ரசீது கொடுக்கவில்லை.

'திருப்பணிச்சபை எதுவுமில்லையா?' என்று கேட்டதற்கு "ஒவ்வொரு மாதமும் உங்களுக்கு அறிக்கையைும் என்று சொல்லிவிட்டு எடுதியாக நழுவிவிட்டார்.

இந்தமாதிரி விஷயங்களில் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி, பொறுப்பானவர்கள் சேர்ந்து திருப்பணிச் சபை அமைத்து காரியங்கள் செய்யவேண்டும் இதைப் பற்றி பத்திரிகைகளிலும் செய்தியைப் பார்க்காததால் சந்தேகப்பட்டு, மற்றவர்கள் கவனமாக இருக்க வேண்டுமென்றே இதை எழுதுகிறேன்."

முதலில் பணம் கொடுத்துவிட்டு பின்னர் சந்தேகிக்கிறார் டாக்டர்! எல்லாம் வொர்ப்பணம்!

0 0 0

"எல்லாம் சிவன் செயலென்றேற்றிப் பணிவர்க்கு, பொல்லாங்கு முன்னோ புத்தியுடன் வாராமே."

—போக சுவாமிகள்.

ஆழமான 'பட்ஜட்'!

நேற்று முன்னிரவு 'பட்ஜெட்' செய்தியறிக்கையை வீட்டில் வானொலியை திருகினார் நண்பர். இனிய புல்லாங்குழல் நாதம் காற்றினில் மிதந்துவந்தது. "என்ன மனிதரய்யா இவர்- கவலையில்லாமல் ஊதித்தள்ளுகிறாரே. நாடுப்பொருளாதார விவரத்தைப்பற்றி! இருக்குதோட்டம்-வயல் இடுக்குமோ!" என்றார் நண்பர். வானொலி நிலைச்சிலைமுன்னரே ஒலிப்பதிவாகி விடுவதை அவருக்கு விளக்கி கறியநான் 'பட்ஜெட்' பற்றி மற்றவர்கள் என்ன கருதுகிறார்களென்று அறியக் கிளம்பினேன்.

கானி உச்ஸ்தரம்பு

"லாரிதியின் காணி விடுகள் கட்டுப்பாடுப் பிரேரணை உண்மையிலேயே வரவேற்கத்தக்கது!" என்று கறிய வாழ் ஐக்கிய வியாபாரச்சங்கக் கணக்காளர் திரு. செ. அருளம்பலம், நாளின் விலையை மட்டும் இவ்வளவு தூரம் அதிகரித்திருக்காவிட்டால் இதுமிக ஓர் அருமையான 'பட்ஜெட்' என்றார்.

வாழ்ப்பாணத்தில் கடைச் சந்நிலையொன்றில் கடமையாற்றும்போர்மன் எம். எஃப். பெர்னாண்டோவும் இதைத்தான் சொன்னார் "இதுமிச்சம் சர்வான விஷயம்... அதுவே இர்க்கிறான் ஆனால் எப்ப்ப்